NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 10 November 2017

# கட்டடங்களில் பசுமைவெளி: 2030க்குள் இரட்டிப்பாகலாம்

சிங்கப்பூரின் அடுக்குமாடிக் கட்டடங்களில் பசுமைப் பரப்பை வரும் 2030க்குள் இரட்டிப்பாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இப்போது, தீவு முழுவதும் கட்டடங்களில் நூறு காற்பந்துத் திடல்களுக்கும் கூடுதலான பரப்பளவில், அதாவது 100 ஹெக்டர் பரப்பளவில் பசுமைவெளி அமைக்கப்பட்டுள்ளது.

அதை 200 ஹெக்டராக அதிகரிக்க 'லஷ்' (LUSH) எனப்படும் நகர்ப்புற வெளிகள், உயர்ந்த கட்டடங்களுக்கான நில வடிவமைப்புத் திட்டத்தை நகர மறுசீரமைப்பு ஆணையம் மேம்படுத்தவுள்ளது.

கட்டுமானத் திட்டங்களில் பசுமையை ஒருங்கிணைக்க கட்டுமான நிறுவனங்களையும் கட்டட உரிமையாளர்களையும் ஊக்குவிக்கும் நோக்கில் 2009ல் இந்த 'லஷ்' திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

சிங்கப்பூர் எக்ஸ்போவில் நேற்று நடந்த 'கிரீன் அர்பன் ஸ்கேப் ஏஷியா' தொடக்க விழாவில் கலந்துகொண்டு பேசிய தேசிய வளர்ச்சி இரண்டாம் அமைச்சர் டெஸ்மண்ட் லீ, "பசுமையை உயர்வாக மதிப்பதும் அதை நேசிப்பதும் இப்போது சிங்கப்பூர் தேசிய அடையாளத்தின் மைய அங்கமாகத் திகழ்கிறது," என்றார்.



11 மாடிகளைக் கொண்ட 'கம்போங் அட்மிரல்டி காம்ப்ளக்ஸ்' கட்டடத்தின் உச்சியில் சமூகப் பூங்கா, காய்கறிகள் தோட்டம், மழைநீர் சேகரிப்புப் பகுதி ஆகியவை அமைந்துள்ளன.
**படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

கட்டடங்களை அழகுபடுத்துவதோடு, வழியில் செல்வோரின் கண்ணுக்கு விருந்தளிக்கவும் சுற்றுப்புறத்தைக் குளிர்விக்கவும் உதவும் விதமாக கட்டடங்களின் சுவர்களிலும் கூரைகளிலும் செடிகொடிகளை வளர்க்க ஊக்குவிக்கப்படும்.

இப்போது, கட்டடங்களைக் கட்டுவதற்காக நிலத்தைத் திருத்தும்போது அங்கு அழிக்கப்படும் பசுமைவெளிகளைக் கட்டுமான நிறுவனங்கள் ஈடுசெய்யவேண்டும் என்பது விதிமுறை.

அதன்படி, நகர்ப்புறப் பண்ணைகள், சூரிய சக்திப் பலகைகள், கூரையில் சமூகத் தோட்டங்கள் போன்றவற்றை கட்டுமான நிறுவனங்கள் அமைக்கின்றன.

"சிங்கப்பூரர்கள் பலர் தோட்டமிடுவதிலும் பண்ணை அமைப்பதிலும் ஆர்வம் காட்டி வருவதால் நகர்ப்புற வடிவமைப்பில் இத்தகைய அம்சங்கள் பிரபலமடைந்து வருகின்றன," என்றார் திரு லீ.

அத்துடன், பல்லுயிர்ப்பெருக்கத்திற்கும் கூரைத் தோட்டங்கள் வழிவகுக்கின்றன.

தேசிய பூங்காக் கழகமும் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகமும் இணைந்து அத்தகைய 30 இடங்களில் மேற்கொண்ட ஆய்வில், 53 பறவையினங்களும் 57 பட்டாம்பூச்சி வகைகளும் அடையாளம் காணப்பட்டன.

இப்போது 'லஷ்' திட்டத்தில் 550 கட்டுமானத் திட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

தீவு முழுவதும் அந்தத் திட்டத்தின்கீழ் வரும் பசுமைவெளி ஆண்டுக்கு 15% என்ற அளவில் அதிகரித்து வருகிறது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.